**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO./201**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் -திரு.நாகராஜன் **PW-43** தொழில் -

த/க பெயர் -ஜெயராமன் வயது -

கிராமம் -

தாலுக்கா -

**(எதிரிகள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் கடலூரில் குடியிருக்கிறேன். தற்போது திண்டிவனம் சார்கருவூல அலுவலகத்தில் உதவி கருவூல அலுவலராக பணியில் உள்ளேன். நான் பி.எஸ்.சி மைக்ரோ பயாலஜி படித்துள்ளேன். 2001 ஆம் ஆண்டு டிஎன்பிஎஸ்சி கோச்சிங் பெறுவதற்காக ஜெயம் கோச்சிங் சென்டர் கடலூரில் சேர்ந்து பயின்று வந்தேன், ஆறு மாதங்கள் அங்கு பயிற்சி பெற்று வந்தேன். 2001 ஆம் ஆண்டு டிஎன்பிஎஸ்சி தேர்வுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. அதனால் எம்.எஸ்.சி

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:54:37 +0530

படிப்பிற்காக தர்மபுரி மாவட்டத்தில் ஒரு கல்லூரியில் சேர்ந்தேன். பின்னர் 2006 ஆம் ஆண்டு குரூப் 2 தேர்வு விளம்பரம் வந்தது. மீண்டும் ஜெயம் கோச்சிங் சென்டரில் கடலூரில் பயிற்சி பெற்று 2006 இல் நடந்த குரூப் 2 தேர்வு, 2007ம் ஆண்டு நடந்த விஏஓ தேர்வு எழுதினேன், அந்த தேர்வுகளில் நான் தேர்ச்சி பெறவில்லை. 2007 ஆம் ஆண்டு நடந்த குரூப் 2 தேர்வு எழுதினேன், மீண்டும் 2008 ஆம் ஆண்டு விஏஓ தேர்வு மற்றும் குரூ மற்றும் குரூப் 1 தேர்வு ஆகியவை எழுதினேன் ஆனால் தேர்ச்சி பெறவில்லை. எனவே நான் கடலூரில் உள்ள ப்ரண்ட்ஸ் ஸ்டடி சென்டர் என்ற கோச்சிங் கிளாசில் சேர்ந்தேன். 2009 ஆம் ஆண்டு விளம்பரம் செய்யப்பட்ட குரூப் 2 தேர்வு 22.03.2009 ஆம் தேதி எழுதினேன், அந்த தேர்வில் நான் தேர்ச்சி பெற்றேன். 04.01.2010ஆம் தேதி கடலூர் மாவட்டம் கருவூல மற்றும் கணக்கு துறையில் பணியில் சேர்ந்தேன் கணக்கராக பணியில் சேர்ந்தேன்.

2) என் தம்பி என்ன வேலை செய்கிறார் என்றால் என் தம்பி தங்கமணி காவலராக வேலை செய்கிறார். மற்றொரு தம்பி கோபாலகிருஷ்ணன் அவரும் காவலராக வேலை பார்க்கிறார். என்னை

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:54:51 +0530

இந்த வழக்கில் எதற்காக போலீஸ் விசாரணை செய்தார்கள் என்றால் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 2 தேர்வில் அந்த தேர்வுக்கு முன்னரே வினாத்தாள் கசிந்ததால் 2014ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதி என்னை சிபிசிஐடி போலீஸ் கோயம்புத்தூரில் வைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :- இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:54:57 +0530

Chief Judicial Magistrate,
Erode.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.ரமேஷ் | **PW–44** | தொழில் | – |
| த/க பெயர் | –ராமசந்திரன் | | வயது | – |
| கிராமம் | – | | | |
| தாலுக்கா | – | | | |

**(எதிரிகள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**<u>முதல் விசாரணை:–</u>**

1) நான் கடலூரில் குடியிருக்கிறேன். நான் பண்ருட்டி வணிகவரி அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் பி.எஸ்.சி மற்றும் எம்.ஏ பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் எந்த ஆண்டு என்னுடைய பட்டப்படிப்பை முடித்தேன் என்றால் 1997–ல் பட்டப்படிப்பை முடித்தேன். 1998 ஆம் ஆண்டு முதல் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கான பயிற்சி செய்து தேர்வு எழுத ஆரம்பித்தேன். 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 3 ஸ்டேஷன் ஃபயர் ஆபீஸர் தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற்றேன் ஆனால் உடல் தகுதி தேர்ச்சி பெறவில்லை. பின்னிட்டு 2001, 2003, 2007 ஆண்டு மற்றும் 2009 ஆண்டுகளில் நடைபெற்ற குரூப் 2, குரூப் 1, குரூப் 4 ஆகிய

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:55:24 +0530

தேர்வுகளை தொடர்ந்து எழுதி வந்தேன், ஆனால் அதில் தேர்வு பெறவில்லை. 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற விஏஓ மற்றும் குரூப் 2 தேர்வு எழுதி இரண்டிலும் நான் தேர்ச்சி பெற்றேன். எனவே முதலில் விஏஓ பணியில் சேர்ந்தேன். அதன் பின்னிட்டு 24.12.2012 ஆம் தேதி வணிகவரித்துறையில் துணை வணிகவரி அலுவலராக வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் சேர்ந்தேன்.

2) இந்த வழக்கில் என்னை எதற்காக விசாரித்தார்கள் என்றால் 12.08.2012ஆம் தேதி நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி தேர்வு சம்பந்தமான வினாத்தாள் தேர்வுக்கு முன்பே வெளியானது தொடர்பாக என்னை கோவை சிபிசிஐடி துணை கண்காணிப்பாளர் 2014 ஆம் ஆண்டு விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :- இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:55:30 +0530

Chief Judicial Magistrate,
Erode.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO./201**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.சக்திவேல் **PW–45** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(எதிரிகள் ஆஜரில் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:–**

1) நான் கடலூரில் குடியிருந்து அரசு மாதிரி பள்ளியில் பி.ஜி கெமிஸ்ட்ரி அசிஸ்டன்ட் ஆக வேலை செய்கிறேன். நான் எம்.எஸ்.சி., எம்.பில்., எம்.ஏ., பி.எட்., படித்துள்ளேன். 1992 ஆம் ஆண்டு டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதினேன். மீண்டும் 1999 ஆம் ஆண்டு எழுதிய டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வில் தேர்ச்சி பெற்றேன். 08.06.2001 ஆம் தேதி புதிய வீராணம் திட்ட கூட்டத்தில் காட்டுமன்னார்கோவிலில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தேன். அதன்பின்னர் 2006, 2007 காலகட்டத்தில் நடந்த டி.ஆர்.பி தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று 21.03.2007 ஆம் தேதி அரசு உயர்நிலைப்பள்ளி கருப்பேரியில் பட்டதாரி ஆசிரியராக

K KRISHNA PRIYA
Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:55:38 +0530

பணியில் சேர்ந்தேன். அலைபேசி எண் அப்போது நான் பயன்படுத்தி வந்ததை எது என்று சொல்ல முடியுமா என்றால் 9952653617 ஏர்டெல் எண்ணாகும். தற்போது என்ன அலைபேசி எண் பயன்படுத்தி வருகிறேன் என்றால் தற்போது ஜியோ அலைபேசி எண் 8610201516 என்ற எண்ணை பயன்படுத்தி வருகிறேன். பழைய எண்ணை என்ன செய்தேன் என்றால் அந்த எண்ணை தான் மாற்றி புது எண் பெற்றுக் கொண்டேன்.

2) என்ன வழக்கு சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரித்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 2 தேர்வில் தேர்வுக்கு முன்பே வினாத்தாள் வெளியான வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்சிபிசிஐடி போலீஸ் சென்னை விசாரித்தார்கள்தேவனால்

**<u>1-எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :- இல்லை.**

**<u>4, 6, 7, 8, 9, 11, 14, 21, 22, 25, 26 மற்றும் 28-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-**

9952653617 எண்ணுடைய கால் ரெக்கார்ட்-யை வைத்து போலீஸ் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்கிற்கும் மேற்படி அலைபேசி எண்ணிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரி. மேற்படி அலைபேசி எண் என்னுடையது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் டிஎஸ்பி என்னிடம் பெறவும் இல்லை, அவர் என்னிடம் அது

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:55:44 +0530

போன்ற ஆவணம் எதுவும் காண்பிக்கவும் இல்லை என்றால் சரி.

**4, 6, 7, 8, 9, 11, 14, 21, 22, 25, 26 மற்றும் 28-ம் வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 3, 10, 17, 18, 19, 12, 13, 16, 15, 20, 23, 24, 29, 30-ம் எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:55:51 +0530

Chief Judicial Magistrate,
Erode.